DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KATPADI

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. | .. | Case No. CC.82/2012 |
| Miscellaneous | .. | .. | |
| Preliminary Register | .. | .. | |
| Sessions | .. | .. | |

Deposition of witness for — Prosection P.W.9 / Defence / Court

Name :.வாசுதேவன்

Father's Name :K.அப்பாதுறை

Village :Katpadi

Taluk :katpadi

Caste :யாதவர்

Calling :காவல் துறை

Religion : Indian

Age :58

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20-7-18

நான். தற்போது வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் இதற்கு முன்பு நான் காட்பாடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றியபோது 13/2/2012 தேதி மாலையில் நிலைய பொறுப்பில் இருந்தபோது கிடைத்த தகவலின் படி வேலூர் சிஎம்சி மருத்துவமனைசென்று அங்கு உள்நோயாளியாக இருந்த நிர்மலா வயது 28 என்பரிடம் புகார் வாக்குமூலம் பதிவுசெய்து நிலையம் 20.30 மணிக்கு வந்து அதன் தன்மைபடி நிலைய குற்ற எண் 185/12 பிரிவுகள் 279, 379,304(எ) இதசபடி வழக்கு பதிவுசெய்து முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும்புகார் வாக்குமுலத்தை இந்நீதிமனற்திற்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவிட்டு ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ4 இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

கு.வி

எனக்கு அன்றைய தினவே சிஎம்சி மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்தது. அன்றைய தினம் மாலையில் மருத்துவமனை சென்றேன். சம்பவம் மாலையில் நடந்துள்ளது. சம்பவ இடத்திற்கு நான் அதிகாரிகளுடன் போய் இருந்தேன். நான் சம்ப்வ இடத்திற்கு போனதாக முதல் விசாரணையில் சொல்லவில்லை. சம்பவத்தில் இறந்து போனவர் வாக்குமூலம் கொடுத்தற்கு என்ன உறவு என்று தெரியாது. நான் வாக்குமூலம் பெறும்போது வாக்குமூலம் கொடுத்தவரிடம் கேட்டேனா என்றால் இறந்து போனவர் தன் கணவர் என்று வாக்குமூலம் கொடுத்துள்ளார். முதல் தகவல் அறிக்கையில் எதிரியின் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனால் லாரியின் பதிவு எண் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவ நடந்த அன்று சம்பவ இடத்திற்கு நானோ, எங்கள் அதிகாரிகளோ, போகவில்லை என்றால் சரியல்ல. நான் அதிகாரிகளுடன் போனேன். முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தபோது குற்றவாளி பெயர் தெரியாதுதால் தான் அவரது பெயரை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடமால் வண்டியின் பதிவெண் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சந்தேகத்தின் பேரில் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.